Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.1/2026

**Depositions of PW- 3**

| Name | திரு.முருகராஜ் | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | முத்தையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of March 2026.

09.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2025ம் வருடம் திருவில்லிபுத்தூர் நகர்காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த முனியாண்டி அவர்கள் பணி மாறுதலாகி வேறு காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.08.2025 ம் தேதி 14.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் முனியாண்டி அவர்கள் காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த கருப்பசாமிபாண்டியன் என்பவரை விசாரிக்க அவரது மனைவி கவிதா என்பவர் 31.08.2025 அன்று கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப காவல்நிலைய குற்ற எண்.405/2025 பிரிவுகள். 281, 125(a) BNS ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலையும் வாதியின் புகார் மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர்அன்றைய தினமே 20.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அசாஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அசாஆ.4 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு சாட்சிகள் கவிதா, கருப்பசாமி, கோவிந்தராஜ், மகேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 13.09.2025 அன்று நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமினில் விடுவித்துள்ளார். பின்னர் 25.10.2025 ம் தேதி திருவில்லிபுத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் அதே தேதியில் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றுள்ளார். **TN 79 F 8709 என்ற பதிவெண் கொண்ட Mahindra Mahindra Tractor, TN 67 AZ 4356 என்ற பதிவெண் கொண்ட டிரைலர், டிரைலருக்கான மோட்டர் வாகன ஆய்வறிக்கை அசாஆ.5 ஆகவும் TN 67 AT 1017 என்ற பதிவெண் கொண்ட Splendor pro இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே விபத்தில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் கருப்பசாமி மற்றும் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் சங்கீதா ஆகியோர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ.7 ஆகவும் ராஜாஜி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று அசாஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 281, 125(a) BNS லிருந்து 281, 125(b) BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து 11.11.2025 அன்று எதிரி மீது பிரிவுகள்.281, 125(b) BNS லிருந்து ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் போன்ற ஆவணங்கள் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு

தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.